[illegible]


மலர் 4 இதழ் 8 Aug 1944

JL
[illegible]2௱21,N35SS
N41·4·8
210840

387

வருஷச் சந்தா ரூ. 1—8—0. ஸ்ரீ: Regd. No. M. 3343.

ஸ்ரீதேசிக ஸ்ரீஸூக்தி



ஸம்பாதகர்— பரவஸ்து. ஸ்ரீநிவாஸாசாரியார்.

வருஷ சந்தா ரூ 3—0

ஆஜீவ சந்தாதாரர் ரூ 50—0—0.

மலர் 4 — வஞ்சிகை 8.

# ஸம்ரக்ஷிணீ

(மாதாந் பத்திரிகை.)

விஷு வருஷ] 1941 வருஷ ஆகஸ்டுமீ [ஆவணிமீ

S. No............ சந்தா நெ............

Sri,

SRI SAMRAKSHINI OFFICE, L. CONJEEVERAM.

## விஷய அட்டவணை.


1. ஒழுக்கம், ஸ்ரீ தி. ராமஸ்வாமி அய்யங்கார் 41.
2. ஹரிப்ரேமை, ஸ்ரீ S. T. ஸ்ரீநிவாஸாசாரியர் M. A., புரொபஸர் திருவாதி காலேஜ்.] 45.
3. திருநாராயணபுரம், (ஸம்பாதகர்.) .... .... 48.
4. மைதிலியின் மனேபாவம், (ஸ்ரீராஜலக்ஷ்மி-மாதவய்யங்கார், பங்களூர்.) .... 141.
5. ஸ்ரீ யாதவாப்யுதயம், 15-வது ஸர்க்கம். (A. V. கோபாலாசாரியர், மதத்ரய பண்டிதர், திருச்சி.) 107—114.
6. ஸ்ரீ ந்யாயபரிசுத்தி, (மதுராந்தகம். ஸ்ரீ தி. ஈ. வீரராகவாசாரியர் புரொபஸர் திருவாதி காலேஜ்.) 73—78.


### ஸம்ரக்ஷிணீ

ஸம்ரக்ஷிணீ ஸம்ரக்ஷகர்களின் ஸன்னிதியில் விநயத்துடன் செய்யும் விஞ்ஞாபனம். முன் பேபர் கிளேஸ் ரீம் 1க்கு விலை ரூபாய் 2–4–0 இப் பொழுது விலை ரூபாய் 7–0–0 முன் ரப்பேபர் விலை ரீம் 1க்கு ரூபாய் 1–8–0 இப்பொழுது விலை ரூபாய் 6–0–0 இதைபற்றி பலதடவை அறிவித்தும் பயன்படவில்லை அறிவாளிகள்சிலர் அங்கத்தினர் சந்தாவை அனுப்பினர். ஏஜண்டுகள் சிலர் வஸூலித்ததையும் வழக்கப்படி அனுப்புவதர்க்கு விளம்புகின்றனர் பாடசாலைகளுக்கும் பண்டிதர்களுக்கும் இனமாக ஸம்ரக்ஷிணியை அனுப்பி வந்தோம் இவ்வருஷத்தில் அவர்களையும் பொருள் உதவி ஆதரிக்கும்படி அபேக்ஷித்தோம். லௌகிகர்களே பலர்பாக்கி வைத்துக் கொண்டிருக்கும்போது பண்டிதர்களை ப்ரதீக்ஷிப்பதற்குப் பிரஸக்தியேது. நம் சிரமமறிந்த சிலர் சிறிது அனுப்பினர்கள். பேபர் விலை கடுமயை உத்தேசித்து முன் 1500 காபிகள் அச்சிட்டதைகுறைத்து 1000 ஸஞ்சிகைகளே அச்சிடப் படுகிறன. ஆகையால் இனமாக அனுப்புவதை நிறுத்திஇருக்கிருேப். க்ஷமிக்கவேண்டும். அசக்தர்கள் அங்கத்தினர் சந்தாவையும் அனுப்புவதற்க்கு அஸௌகரியத்தை அறிவித்தால் அவர்களுக்கு அன்ப்புவதையும் நிறுத்திக்கொள்வதற்க்கு அனுகூலமாகும் எப்படியாவது ஜீவதி என்கிறரீதியிலிருந்து வந்தால் அனுகூலகாலத்தில் அபேக்ஷிதங்களின் ஸம்ருத்திகளை ஸம்ரக்ஷிணீ ஸம்பாதித்துக் கொள்ளும் என்பதில் ஸம்சயமில்லை. ஸம் - கர்


OFFICE OF ... BOOKS
21 NOV 1941
MADRAS
16840



ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

# “ஸ்ரீ தேசிக ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷிணீ”

(ஓர் மாதப் பத்திரிகை.)

ஜீவநம் ஜமதாம் ஜீயாஜ் ஜீவைவ்யூவமதஹூரஹஷ ।
ஹூதஞூம் ஹவதஞேஷூ வெங்கடேஶாஹ்வயம் மஹ: ॥



| ஸம்புடம் | விஷு ஆவணி. | ஸஞ்சிகை |
|---|---|---|
| 4. | ஆவணி. | 8. |

## ஒழுக்கம்.

ஒழுக்கமென்ருல் நடத்தை, அனுஷ்டானம். நல்லொழுக்கமெல்லாம் முன்னே நல்வழியிற் சென்றோருடைய பழக்கத்தை யொட்டியே வரும். யுக்தாயுக்தங்களை நன்குணர வல்ல விவேகமும் அயுக்தத்தை தள்ளி யுக்தத்தை மட்டும் அவலம்பிக்க தைரியமும் ஒருவனுடைய நடத்தையை நன்னடத்தை யாக்கி அவனுடைய ஒழுக்கத்தை நல்லொழுக்கமாக்குவன, ஞானம், அனுஷ்டானம் இரண்டையும் உலகிற்கு உபதேசிக்கவென்றே அவதரித்த உத்தம புருஷராம் நம் தூப்புல் மாபுருடன் மலரடிப் போதுகளுக்கன்பு பூண்டவர்கள் ஒழுக்கத்தில் சிறந்து விளங்குவதில் என்ன வியப்பு?

ஞான வைராக்ய பூஷண ரென்று அஸாதாரண பிறுது வாய்ந்த ஸ்வாமி தான் வேதாந்த தேசிகராகக் கூடும். முன்னேர்கள் தெளியாத மறை நிலங்களெல்லாம் தெளிந்து வேதாந்தத்திற்கு அபார்த்தம் செய்யவொண்ணுதபடி குருவாய் விளங்கு மிவருடைய ஸ்ரீஸூக்திகளில் பல இடங்களில் இவர் துணையில்லாத் தொன்மறை நூல் துலக்கிய வழியை விட்டுச் சிறிதும் விலகாத ஒழுக்கத்தை உடையவரென்பது நன்ருய் விளங்குகிறது. “அங்கீகுர்வன் அநகலளிதாம் வ்ருத்திம் ஆதேஹபாதாத்” (தேகம்விழுமளவும் குற்றமற்ற ஒழுக்கத்தை மேற்

கெண்டு) ஸ்ரீஸூக்தி சப்தங்கள் ஸ்வவிஷயமாகப் பிரயோகிக்கப் பட்டனவென்றே சொல்லலாம். இதே அபிப்ராயத்தை பல விடங்களிலும் ஸாதித்தாகிறது. திவ்யதம்பதிகளின் கைங்கர்ய ஸாம்ராஜ்யத்திற்கு ஆசைப்பட்டு, மாயையால் விரிந்த த்ரிலோக ஐச்வர்யங்களையும் த்ருணமாகமதித்து அத்திவ்ய தம்பதிகளின் உகப்பைப்பெறவேண்டி வேதம் விதித்த வரம்புகளைக் கடவாத நல்லொழுக்கத்தைத் தாமும் நடத்திக் காட்டி தம்மருளிச் செயல்களும் உபதேசித்துப் போன உத்தமபுருஷன் இவரன்றி வேறொருவரில்லை யென்று ஸத்யம் செய்யலாம். ஸத்யம், ஸத்யம், புனஸ் ஸத்யம்.

ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்தில் அதிலும் முக்கியமாக க்ருதக்ருத்யாதிகாரம் ஸ்வநிஷ்டாபிஜ்ஞாநாதிகாரம், உத்தரக்ருத்யாதிகாரம் ஆகிய இம்மூன்றதிகாரங்களிலும் விவரிக்கப்பட்ட ஒழுக்கம் ஒருவனுக்கு ஏற்பட்டால் அப்புறம் விரும்பக்கூடியது வேறுண்டோ? உத்தரக்ருத்யாதிகாரார்த்தங்களை சரணாகதிதீபிகையில் ச்லோகரூபமாய் ஸங்க்ரஹித்திருக்குமழகை அனுபவிக்க வேண்டும். (31-முதல் 36-வரையிலான ச்லோகங்கள்) ஸ்வாமி தமது வாழ்நாட்களை எப்படிக் கழித்தாரென்று பலவிடங்களில் அருளிச்செய்திருக்கிறார். "யதிப்ரவரபாரதீரஸபரேண நீதம்வய:" "நிர்விஷ்டம் யதிஸார்வபௌமவசஸாமாவ்ருத்திபிர்யௌவனம்" முதலியன பல. அவற்றுள் ஸாரதமமானது இந்த ஆறு ச்லோகங்களில் காட்டப்படும் வாழ்க்கைச்சித்திரம் முழுவதையும் அனுபவித்து ஆனந்திக்கவேண்டும். விரிவுக்கஞ்சி கடைசிச்லோகத்தின் பொருளைமட்டும் இங்கே குறிக்கிறேன். "ஒன்றேபுகலென்று எம்பெருமானைச் சரணமாகப்புகுந்து, பகவதபசாரம் புரிவோரைப் பாம்பென மதித்து அவருள்ளதிக்கையும் நோக்காது, ப்ரம்ம சிவாதிப்தங்களை அபதார்த்தமெனத் திரஸ்கரிக்கும் தைரியமுடையவர்களாய், கரணத்ரயங்களை ச்ரிய: பதி திறத்தில் உத்யோகிக்க விடுவதால் ஏற்படும் பூர்ண ஸுகம்பெற்றுத் தமது காலத்தைக் கழிக்கிறார்கள் ஸத்துக்கள்." (36-வது ச்லோகம்.)

வைராக்ய ராசியான இவர் மண்ணாசை பொன்னாசையை வெறுத்தச்லோகங்களை வைராக்கிய பஞ்சகத்தில் காண்கிறோம். பெண்ணாசையைப் பற்ற விரக்தி எப்படி யிருக்கவேண்டுமென்று இவ்வாசார்யவள்ளல் அருளிச்செயல் விலக்ஷணம். ஸ்ரீஸங்கல்ப ஸூர்யோதயத்தில் வைராக்யத்திற்கு லக்ஷணம் கூறுகிறார்,



நிஷ்டதுகுணவமர்ச: ஸ்த்ரீணாம் ஆலோகநாதிபிஸ்ஸார்த்தம், தோஷாநுசிந்தனார்த்தால்மம்ருதிரபிதூரீகரோதிவைராக்யம்.[ஸ்த்ரீகளைப்பார்ப்பது, அவர்கள் குணங்களை வர்ணிப்ப தெல்லாம் கிடக்க அவர்களது தோஷங்களை அநுஸந்திக்க அவர்களைப்பற்றிச் சிந்திப்பதும் கூடவைராக்யத்தைப் போக்கிவிடும்.] "முந்துற உரைக்கேன்மடவார் கலவியைவிடு" என்றுஉபதேசிக்கும் ஆழ்வார்களும் "வான்நிலா முறுவல், சிறுநுதல் பெருந்தோள், மாதரார் வனமுலைப் பயனே பேணினேன், என்று" பேசுவது அவ்வளவு உசிதமல்ல என்று ஸ்வாமி திருவுள்ளம் போலும். அச்சொற்கள் பகவத் பக்தியில் ஆழ்ந்து கிடந்த ஆழ்வார்களது விரக்திக்கு மாறுசெய்ய மாட்டா வென்றாலும், சிற்றின்பப்புத்தி மாறாத மற்றவர்கள் அவைகளைப் படிக்கும் போது உயர்ந்த வைராக்கியநிலையினின்று நழுவஹேதுவாகுமோ, என்று அஞ்சி இவ்வண்ணம் அருளிச் செய்திருக்க வேண்டும். வைராக்ய பூஷணத்தின் பேச்சல்லவா இது? ஆழ்வார்களுடைய ச்ருங்காரங்களைப்பக்தியின் பரிணாம மென்று காட்டியதே நம்ஸ்வாமிதானே! "பக்தி: ச்ருங்கார வ்ருத்யா பரிணமதி" என்றும் "பக்திம் நிஜாம் ப்ரணய பாவநயாக்ருணந்த:" என்றும் பகவத் காமத்தை நிலைகாட்டியது காமமேயறியாத இக்கவிதார்க்கிகஸிம்மந்தானே!

ஸ்வாமியினுடைய அனுஷ்டானத்தின் தூய்மையையும் மேன்மையையும் குற்றமே பெரிதுடைய அடியேனா எடுத்துச் சொல்லவல்லவன்? அவ்விஷயத்தில் பூர்வர்களெல்லாம் வியந்து பலபடியாக அனுபவித்திருக்கிறார்கள். "யதீயசரிதம் ஸதாம் ஸச்சரிதவ்யவஸ்தாபகம்." ஸ்ரீஅண்ணன் புகழ்ந்துள்ள ரீதி இது. ஸத்துக்களுக்கு எங்கேயாவது ஒழுக்கத்தில் தர்மஸந்தேஹம் வந்தால் ஸ்வாமி தேசிகனுடைய ஒழுக்கத்தைக் கண்டு ஸம்சயத்தைப் போக்கிக் கொள்வார்களாம். இனிப்பல சொல்லி என் பயன்? நல்லொழுக்கமுடையோரெல்லாம் ஸ்வாமி தேசிகன் காட்டிய நல்லமார்க்கத்தையேபின்பற்றுவார்கள்என்று ஸ்வாமியேகாட்டிவிடவில்லையா? ஆஸ்திச்யவான், நிசிதபுத்தி:, அகப்யஸூயு:, ஸத்ஸம்பராதாய பரிசுத்தமநா:, ஸதர்த்தி ஸங்கேதபீதி ரஹித: ஸ்த்ருணேஷ்வஸக்த: ஸத்வர்த்தநீம் அநுவிதாஸ்யதி சாச்வதீம்ந:, இதில் ஒவ்வொரு அடைமொழியும் ஸ்வாமிக்கே பொருந்தும் அவர் ஒழுக்கத்தால் காட்டிய வழிதான் ஸத்வர்த்தனீ. ஓரடிவழி.

தி. ராமஸ்வாமி தாஸன்.

(ஸ்திரீகள் பகுதி 143-ம் பக்கத்தின் தொடர்ச்சி.)

ஆகையினால் எப்படியும் தப்பிற்குத் தக்க தண்டனை விதிப்பது ஸாத்தியமில்லை. குறைந்த தண்டனை விதிப்பதைவிட மன்னிப்பது மேலல்லவா? கருணைக் கடலாகிய பிரபுவிற்கு அது தான் அழகு, குற்றவாளியின் பொருட்டு அவன் மனைவி செய்திருக்கும் அஞ்சலியைக் கண்டும் பரமபுருஷனின் ஹ்ருதயம் உருகாமல் இருக்குமோ? அதுவும் அன்னை பக்கத்திலிருக்கும் தருணம் மக்களை தண்டிக்க இயலுமோ? பொல்லாத சேயெனில் தாய் தள்ளுதலுமுண்டோ?

பெரிய பிராட்டியார் முன்னிலையில் நீள்கள் எவ்விதம் தண்டனை விதிப்பீர்கள்? பார்க்கலாம்! “என்று பலவகையால் வாதாடி ஜயித்துவிட்டாள்.

இவ்வுலகில் என்பதியை ஒருவராலும் காப்பாற்ற முடியவில்லை. தாங்கொண்ணாத தண்டனைக்கு உள்ளானார். ஆனால் அவர் திருவேங்கடமுடையான் தயவினால் மன்னிக்கப்பட்டார். இப்பொழுது தான் என் மனது நிம்மதியடைந்தது, இவ்வுலகின் ஸுகமும், துக்கமும், மான அவமானமும், ஹரிச்சந்திரன் நளன் முதலிய சக்ரவர்த்திகளையே விடவில்லையே! நதிகளினால் செய்யப்படும் மேடும், பள்ளமும் குழியும், அலைகளும், நிலையில்லாச் செல்வம் அழியும் இளமை இவைகளை நினைவூட்டவில்லையா? என்று மூச்சுவிடாமல் சரமாரியாய் உபன்யாஸம் செய்தாள்.

அவள் பிரஸங்கத்தை கேட்டவர்கள் அனைவரும், ‘ஐயோ, இவளுக்கு சித்தப்பிரமை, ஞானப்பயித்தியம், ஆவேசம்’, என்று தோன்றியவாறு பலவிதமாக சொல்லிக் கொண்டார்கள்.

ஆனால் தெரிந்த மஹான் ஒருவர், அவளுக்கு பயித்தியமுமில்லை. பேயுமில்லை, ஆழ்வார்களைப் போலல்லவோ இருக்கிறது இம்மங்கையின் மனோபாவம்! “பலவிதரணதக்ஷம்” “அனுபவிதுமசௌகம்” என்னும் தயாசதகச் சுலோகங்களின் அர்த்தத்தை பிரத்யக்ஷமாய் அனுபவித்திருக்கிறாள், இவ்வித பக்குவமடைந்த மனோபாவம் எவருக்குத் தான் உண்டாகும். ஆசார்யானுக்ரஹம் அவளிடம் பரிபூர்ணமாக இருக்கிறது, என்று கொண்டாடினார்.

அவள் ப்ரஸங்கத்தினால், அவள் பர்த்தாகெட்ட ஸஹவாஸத்தினால், செய்யக்கூடாத பாபங்களைச் செய்து, ஆஸ்தியை இழந்து அவமானங்களையும் கஷ்டங்களையும் அடைந்தாரென்றும்; அத்தருணம் இவள் ஒரு பெரிய மஹானை அடைக்கலம் புகுந்து, அவரனுக்கிரகத்தால், பகவானிடத்தில் இவ்வித திடமான விச்வாஸமும் உண்மை ஞானமும் அடைந்திருப்பதாகவும் தெரிய வந்தது.

**ஸ்ரீ ராஜலக்ஷ்மி-மாதவய்யங்கார், பங்களூர்.**



# “ஹரிப்ரேமை”

S. T. ஸ்ரீநிவாஸசாரியர் M. A.

ஸ்ரீய: பதியான ஸர்வேச்வரனை எப்படி ஒரு ஜீவன் நேசிக்கவேண்டுமென்று ஒருவர் கேட்டதற்கு மற்றொருவர் சொன்னதாவது:- “வெகுகாலம் புத்திரப்பேறற்று இனி அவ்வாசையை ஒழிக்கவேண்டும் என்று வெறுத்துப் போந்த ஓர் கோடீச்வரன், பூர்ண சந்திரோதயம்போல் ஓர் ஆண்மகனை அடைந்து, அதனால் ஸகல கார்ஹஸ்த்யமான இன்பங்களும்பெற்று, அம்மகன் காளைப் பருவமடைந்தவுடன் விதிவசமாக அதை இழந்தால் என்ன பாடு படுவானோ அப்பெருந்துயரை, ஹரியைக்காணாத காலத்தில் அனுபவிப்பவரே ஹரிபக்தர். அக்குழந்தை பாக்யவசத்தால் தன் வசம் திரும்பினால் அக்கோடீச்வரன் என்ன மகிழ்ச்சியுறுவானோ, அந்த மகிழ்ச்சியை, ஸ்ரீமன் நாராயணனைக் கண்டக்கால் யார் பெறுகிறாரோ அவரே ஹரி பக்தர்” என்பதாம்-

திரு நாராயணபுரம் என்னும் திவ்யதேசம் ஒரே குழப்பமாயிற்று. புறச்சமயிகள் வெகு நாட்கொண்ட அழுக்காற்றின் பயனாய், ஸர்வேச்வரனது திவ்யாலயம் தீவாய்ப்பட்டது. அரசன் புறச்சமயியாய், திருமாலடியவர்க்கு இன்னலே புரிந்து வந்தமையால் ஜனங்கள், ஏதும் செயலற்றவராய் இக்கண்ணராவியான காக்ஷியைக் கண்டு புழுங்கினர்.

மடமடவென்று தீப்பிடித்து எரியும் சப்தம் கேட்கிறது. ஸாத்விகர்களான ஸ்ரீவைஷ்ணவர்கள் தங்கள் ஸுகதுக்கங்கள், ஸ்ரீமன் நாராயணனது அதீனம் என்று நினைத்து அவன் கைவிடமாட்டான் என்று மனந்துடித்து அபௌருஷேயமான ஸஹாயங்களை எதிர்பார்த்திருந்தார்கள்.

மூங்கில்கள் ‘மடார் மடார்’ என்று வெடித்துத் தெருவெல்லாம் விழுகின்றன. திவ்யாலயத்தின் மஹா மண்டபம் வெந்து அர்த்த மண்டபத்தின் விட்டங்கள் கொழுந்துவிட்டெரிகின்றன. கோயிலைச் சுற்றிப் புறச்சமயிகள் ஆயுத பாணிகளாய் நிற்கின்றனர். திருமாலடியவர்கள் தங்கள் கண்களை மூடிக்கொண்டு வெதும்பி, வாய் விட்டுக் கதறினர்.

மாலை இருட்டில் ஓங்கி யெரியுந்தீயின் ஒளி, பிள்ளை திருநறையூரரையர் வதனாரவிந்தத்தில் ப்ரதிபலித்தது. ப்ரசாந்தமான திருமுகம்! "என்ன நேரினும் இறைவன் திருவுளம்" என்ற தெளிவு. தாண்டவமாடும் திருக்கண்கள்! பொலிவுற்ற திருமேனியில் துவாதசபுண்ட்ரமான திவ்யாபரணங்கள்- அராவின் உரியன்ன தூய மெல்லிய ஆடை- கலக்கமற்ற உள்ளத்தைக் காட்டும் நடை- இவ்வுத்தமர் பின் இவரது தேவிகளும் மூன்று குழந்தைகளும் நடந்தன.

திவ்யாலயத்தில் சுட்டு வீழ்ந்த மூங்கில்களையும் கட்டைகளையும் வெகு கஷ்டத்துடன் விலக்கி இயல்பாகவே மரப்பகுதிகள் மிகுந்து விழாத சிறு வழி பிடித்துக் கர்ப்பக்ருஹத்தை அடைந்தார். ஒரே புகை!! குழந்தைகள் தாயை அணைத்து அத்தாய் அப்பெரியவரைக்கைப் பிடித்து உள்ளே நடந்தனர். ஓர் வலிய அக்னிஜ்வாலை கர்ப்பக்ருஹத்தை ஆக்ரமித்தது. ஒரே வெளிச்சமாயிற்று- துலங்கு நீண்முடியும், பொலிவுற்ற செந்தாமரைக் கண்களும், மகர நெடுங் குழைக்காதும், மந்தஹாஸமும், மல்லார்ந்த தோளும், வரையன்ன திருமார்பும், திருமகள், வனமாலை, கௌஸ்துபங்களும், பீதகம் பொலிந்த அரையும், மேகலாகலாபமும், உலகத்தின் துயரை அளந்து தீர்த்த திருவடியிணையும் அந்தப் பெரியவரின் கண்களுக்கு இலக்காயிற்று.

"க்ருபாஸமுத்ரமே" என்று வாய்விட்டு மரங்களுமிரங்கக் கதறினார்.

"திருமேனியைத்தீ தீண்டாது அணைத்துக் கொள்ளுங்கள்" என்றார். குழந்தைகளும், அக்குலவதுவும், அந்தப் பரமஸாத்விகரும் ஸ்ரீ பூமி நீளைகள் ஆண்டாள், கோபியர், இவர்கள் ஆலிங்கனஞ் செய்யும் திவ்விய திருமேனியைக் கட்டித்தழுவினர்.

"அரவிந்தம்! என் அப்பனது ஸ்பர்சம் தாபத்ரயத்தைப் போக்கு மல்லவா" என்றார் ஸ்வாமி தேவிகளை நோக்கி அவரது திருக்கண்களில் தடுமாறும் கண்ணீர்த் துளிகளைப் பார்த்து அவ்வம்மணி பெருங்காற்றில் வாழைபோல் நடுங்கினாள். மேல் விட்டம் பிடித்து மடமடவென்று எரிந்தது. தீ நெருங்கியது, உடலெல்லாம் பொறுக்கொணாததாபம். ஒரு குழந்தை பொறுக்



கொணாமல் "கூ கூ" என்றது. மற்றொன்று "அப்பா! அந்த திவ்யலோகத்தில் எப்பொழுது பார்த்தாலும் குளிர்ந்த தடாகங்களும் ..........." எனவே, தீ அக்குழந்தையின் மேல் பிடித்தது, "அப்பா! அப்..............."

'குழந்தாய்! விரஜைகிட்டுகிறது- பயப்படாதே"........ பாகவத குடும்பத்தின் மேல் தீ எறிக்கொழுந்து விட்டெரிந்தது. பருத்த உத்தரங்களும் தூண்களும் சரிந்து குவிந்தன. திருமேனியை அணைத்தவண்ணம் பிள்ளைத் திருநறையூரரையரது திவ்ய குடும்பம் செல்வ நாராயணனது திருமேனியை உடம்பில் உயிருள்ளமட்டும் பரிவுடன் போற்றியது.

பரம ஸாத்விகரானவாசகரே! நாம் இப்பொழுது நமதென்றுகளிக்கும் ஸ்ரீவைஷ்ணவ ஸமயமானது எல்லையில்லாச் சோதனைகளுக்கு ஆளாகி அந்த அந்தக் காலங்களில் மஹான்களால் பரிபாலிக்கப்பட்டு வந்துளது. ஸ்ரீயஃபதியே தாரகபோஷகமாய் அவன் பால் எல்லையற்ற அன்பு கொண்டு லீலாவிபூதியாகையால் அவனது அர்ச்சாவடிவுக்கு நேரும் இன்னல்களில் கரைந்துஉயிரை விட்டவர் எல்லையற்றவர். இந்தப் பிள்ளை திருநறையூரரின் காதலுக்கு யாரை உபமானமாகச் சொல்வது? ஆக்குவதும் அழிப்பதும் ஆளுவதும் ஸ்ரீ அச்சுதனே என்று அவனது லீலைக்கடங்கி மகிழ்ந்து தெளிந்த இவரது குடுபத்தின் பாக்கியந்தான் என்னே!! வாசகர்களே! நிஜமான ஹரிப்ரேமை என்பது வேறு எவ்விதமாயிருக்கும்? அவ்வன்பு திருக்கடன் மல்லையிற் போலே, ஹரியைக் காண்பதற்குக் கடலையிறைக்கச் செய்யும்! வஞ்சிமா நகரிற்போல ரக்ஷணத்தின் பொருட்டுச் சதுரங்க சேனையுடன் த்வரித்து ஓடச் செய்யும்! கையில் தாளமெடுத்து இத்திருமேனி "பல்லாண்டு! பல்லாண்டு! பல்லாயிரத்தாண்டு!!" என்று சேஷ சேஷித்வம் தலை புரண்டு வாழ்த்தவும் சொல்லும்-

நேயர்களே! இவ்விருத்தாந்தத்தை நினைத்த பின், அடியேன் போன்றவர் தம்மை மெய்யன்புடையவராகக் கனவிலுங் கருதலாமோ!........... **கருதலாம்! எப்படி? மெய்யென்றால் இந்தப்பாழும் உடலுக்கும் பெயர்!.**

இத்தகைய இன்னல்களுக்கு இடமாயிருந்த திருநாராயண புரம் எம்பெருமானாரால் சீர்திருத்தபட்டு'நவநவபைஹ-ஹோராம நாயநாராயணதவம் விரஅயத-ஸிதெளவைஷாஉநா ஷ்ராதஹம யாம்। வஹஜவ-யுஹதா மெஸ்ஷதிரஹயதநீயாம யதிவரிவபூஜ ஹரஉதீராம யாதவாதெஷஊரஜிம ॥ (பொ-ள்) உலகத்திர்க்கு உடையவனை திருநாரணனே யதிராஜன் திருவுள்ளத்திர்க்கு உகப்பானயதுகிரியின் ஸம்ருத்தியை புதிதுபுதிதானபோகமுள்ளதாயும் துரிதவெள்ளம்போன்ற துஷ்காதிகளால் துன்பமில்லாமலும் ஒருவருக்கொருவர் அடிமைபூண்ட அடியார்கள் ஆசைப்படும் படியும் செய்யவேண்டும்'' என்று ஸ்ரீநிகமாந்தமஹாதேசிகனல் மங்களாசாஸனம் செய்யவும் பெற்றது. இம்மங்களாசாஸனத்தின் பெருமையால் இன்னும் பலவித்வான்களும் வித்யார்த்திகளும் நிரைந்திருப்பதோடு ஆலயப் ப்ரவேசம் முதலிய ஆபத்துக்களின்றியும் இருகலையாரும் சேர்ந்து அவரவர் வாழித் திருநாமங்களை அவரவர்கள் பாத்திரங்களுடன் அநுஸந்திப்பதும், பக்ஷிராஜனல் •ஸ்ரீ கண்ணபிரானிடம் சேர்க்கப்பட்டு அக்கண்ணனல் ஸமர்ப்பிக்கப்பட்ட வைர முடியை பங்குனி சுக்ல தசமியில் ப்ரம்மோத்ஸவத்தில் செல்வப்பிள்ளை முடியில் தாங்கி எழுந்தருளும்போது பல்லாயிரவர் கண்ணாரக்கண்டு மகிழ்வதும், பல மண்டபங்களில் எழுந்தருளிப் புதுபோகங்கள் (தளிகை முதலானதுகள்) கண்டருளுவதும் பரம பாவனங்களான புண்ணிய தீர்த்தங்கள் நிறைந்திருப்பதும், தீர்த்தகரார்களும் தீர்த்த பாதர்களுமான பல ஆசார்யர்கள் இங்கெழுந்தருளி இவ்வைபவங்களை அனுபவிப்பதும், இன்னும் பல விசேஷங்களும் நடைபெறுகின்றன. இங்கு ஸ்ரீ தேசிகன் ஸன்னிதியில் பெருமாளும் பிராட்டியும் பல உத்ஸவங்கள் பல தடவை எழுந்தருளுவதும் தீர்த்தம், சடாரி, மாலை முதலிய மரியாதைகளை மகிழ்ந்தளிப்பதும் குறிப்பிடத்தக்கது. இந்த திவ்ய தேசத்தில் வைரங்களை வைரமுடியில் காணலாமேயொழிய ஸ்ரீவைஷ்ணவர்களிடம் காண்பதர்க்கில்லை. இருகலையாரும் கலந்து இருவேதங்களையும் ஓதுவதை இப்பவும் இவ்வொரு திவ்யதேசத்தில்தான் காணலாம்.

(ஸம்பாதகர்.)

———::(O)::———



ஸ்ரீ:

# மைதிலியின் மனோபாவம்.

—:-:(O):-:—

மைதிலியும் நானும் பால்ய ஸ்னேஹம். பகவத் ஸங்கல்பத்தினல் ஒரே ஊரில் வாழ்க்கைப்பட்டு ஈருடலும் ஓருயிருமாக உலாவிவந்தோம். அவளுடைய சாந்தமும் புன்னகையும் தவழும் முகத்தைக் காணாத தினம் தினகரனைக் காணாத்துர்தினமாகவே தோன்றும். வேடிக்கை விநோதங்களுக்கோ, கோவில் குளங்களுக்கோ நாங்கள் தனியாகச் சென்றதே கிடையாது. ஆனல் இம்மண்ணுலகில் எவருக்குத் தான் சந்தோஷமும் உத்ஸாகமும் நீடித்திருக்கும்? எங்கள் துரதிருஷ்டம். மைதிலியின் கணவரை தூரதேசத்திற்குமாற்றிவிட்டார்கள், என்ன செய்வது! முதலில் அவள் பிரிவை ஸகிப்பது அரிது என்றே எண்ணினேன். மனிதஸ்வபாவம், காலம் செல்லச் செல்ல ஸகலமும் ஸஹஜமாய் விடுகிறது. எனக்கும் உயிர்த்தோழி ஒருவள் உண்டென்பதே நினைவில்லை. இடையில் 25-வருஷங்கள் இரவு பகலாகவே, ஓட்டைக் குடத்தில் வைத்த ஜலம்போல் ஓடி ஒளிந்தன.

எதிர்பாராமல், நேற்று வெள்ளிக்கிழமை, திருவேங்கடமுடையான் திருமஞ்சன காலத்தில் அவளைச்சந்தித்தேன், மிகவும் உருமாறி அடையாளமே தெரியாமல் தென்பட்டாள். முதுமையின் சின்னங்கள் மாத்திரமின்றி, முகம் களையிழந்து, வருத்தமும், வெறுப்பும், வெட்கமுமே வடிவு கொண்டவளாய் விளங்கினள், எனக்குப்பெருமாளை ஸேவிக்கவேதோன்றவில்லை, அவளை உற்று நோக்கினேன். பழகிய முகமாகத் தோன்றியதே தவிர அவளென்று அடையாளமே தெரியவில்லை.

அவள் என்னைப் பார்த்துச் சிறிது சிரித்து "செண்பகம், என்னை முழுவதும் மறந்து விட்டாயா? ஆம். அதில் ஆச்சரியமொன்றும் இல்லை. நான் பழைய மைதிலியல்ல, புனிதமான புனர்ஜன்மமெடுத்துவிட்டேன்'', என்றாள்.

"என்ன! என்னுயிர் தோழியா? உன் ஆடம்பரமும் அழகும் எங்கு ஓடிமறைந்தன? உன் அன்புள்ள பர்த்தா எங்கே? எலும்பும் தோலுமாக இருக்கிற இவர்களா உன் குழந்தைகள்?

உனக்கு என்ன கஷ்டங்கள் நேர்ந்தன!", என்று, ஸந்நிதி என்னும் நினைவழிந்து அலறினேன்.

"சண்பகம், பொறு, பெருமாளை திருவடியிலிருந்து திருமுடிவரையில் ஸேவி, எம்பெருமானுடைய திவ்ய மங்கள விக்ரஹமானது ஸர்வோத்தமம். ஸமஸ்த மங்களங்களுக்கும் இருப்பிடம், ஸகல புருஷார்த்தங்களையும் எல்லையற்ற ஆனந்தத்தையும் கொடுக்கக் கூடியது. ஆகையினாலேயேயன்றோ ஸ்ரீராகவன், நிகரற்ற புத்திமானான மாருதிக்கு இதைவிட மேலான பொருள் ஒன்றுமே இல்லை என்று, தன் திவ்ய திருமேனியின் சேர்க்கையையும் ஸுகத்தையும் அருளினார். ஆஞ்சனேயர் வேண்டியதும் அதுவே. பெருமாளின் திருமேனி அழகாகிற அம்ருத்தை ஸதா பானம் செய்பவராகிற அவருக்கு புல்லுக்கு ஸமமான மற்ற பகுமானங்கள் ருசிக்குமா? அந்த ருசியில் ஓர் திவலையையாவது நாம் அனுபவிக்கலாம்! இந்திர நீல பர்வதமோ? சரத் காலத்தில் ஒன்றாய் சேர்ந்திருக்கிற ஜிலுஜிலு என்கிற வர்ஷாகாலத்தின் வடிவமோ வெகு காலம் சிந்தித்துக் கொண்டிருந்த நம் மனதின் பாக்கியமோ? ஆச்சர்யங்களுக்கெல்லாம் முதலாவதான ஆதி தேவதையோ? நாம் இப்பொழுது தான் செய்த ஸுகிர்தங்களுக்கேல்லாம் அப்பொழுதே பழுத்த பழமோ? நம் இஷ்டார்த்தமெல்லாம் ஒன்று கூடி வந்திருக்கும் நிதியோ? என்றிருக்கும் எம்பெருமானை ஸேவிக்காமல், வீண் வினைகளை விலைக்கு வாங்காதே, "ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலாவடிமை செய்யவேண்டும் நாம்", என்று ஆழ்வார், நாம் எப்பொழுதும் திருவேங்கடமுடையான் ஸந்நிதியில் நித்யவாஸம் செய்துக் கொண்டு, ஸகல விதமான கைங்கர்யங்களையும் செய்யவேண்டும் என்று உபதேசித்தார். நாமோ நம் ஆயுளில் ஓரிரண்டு தடவை வருவதும் அரிதாயிருக்கிறது. வந்து ஸேவிக்கும் ஸமயத்திலாவது அவ்வெம்பெருமானின் குணங்களையும், திவ்ய மங்கள விக்ரஹத்தின் ஸௌந்தரியத்தையும் அனுபவிப்போம், என்றாள்,

ஆஹா! என்ன இவள் வாக்கு! இவள் பக்திதான் என்னே! அழகும் ஐச்வர்யமும் குன்றியிருந்ததேயன்றி, அறிவும் பக்தியும் அதிகமாய் அலர்ந்திருந்தது, அவள் ஸ்ரீமத்தேசிகமணி அருளிச் செய்த தயாசதகம் என்னும் ஸ்தோத்திரத்தை உள்ளன்புடனும் உருக்கத்துடனும் பாடிக் கொண்டிருந்தாள். திருமஞ்சனம் முடி-



யும் வரையில் பொறுமையுடன் பேசாமல் பெருமாளை ஸேவித்துக் கொண்டிருந்தேன். வெளி ப்ராகாரத்துக்கு வந்ததும் ஆவலுடன் அவள் விருத்தாந்தத்தை வினவினேன். அதற்கு அவள் நேர்விடை கூறாமல்,

"எல்லாம் ஸஹவாஸதோஷந்தான், அம்ருதமானது மரிந்தவர்களை மறுபடியும் பிழைக்கச் செய்வதாலும், விஷமானது உயிருடனிருப்பவர்களை மரிக்கச் செய்வதாலும், புகழ்ச்சியை அடைவதுபோல், ஸத்துக்கள் ஸத்காரியங்களாலும் அஸத்துக்கள், அஸத்காரியங்களாலும் கீர்த்தியடைகிறார்கள், நல்லோர்களின் சேர்க்கையினால் நன்மையையே அடைவோம், தீயோர்களின் சேர்க்கையினால் படுகுழியில் தான் விழுவோம். காற்றுடன் சேர்ந்த உபயோகமற்ற தூள்களும் கூட, உயர்ந்த ஆகாயத்தில் செல்லும் சக்தியுடையதாகிறது. அதேபோல், அத்யல்பர்களாகிய நாம், மஹான்களாகிய ஆசார்யர்களின் கடாக்ஷத்தால், உன்னத ஸ்தானமாகிற திருவேங்கடமுடையானின் திருவடிகளில் ஸமர்ப்பிக்கப் படுகிறோம். ஆனால் என்ன செய்வது? அனைவருக்கும் ஆசார்யகிருபை கிடைக்கிறதா? அவரவர் கர்மத்துக்கு தக்க ஸஹவாஸமும் புத்தியும் அதற்கு தகுந்த தண்டனையும் தான் கிடைக்கிறது-அதை அனுபவித்தேதான் தீரவேண்டியிருக்கிறது. ஆனால் விண்ணுலகில், மகாபாபியும் அத்தண்டனையை அடையாமலிருக்க ஓர் மார்க்கம் காட்டியிருக்கிறார் நம் ஆசார்யவள்ளல்.

இப்பொழுது ஸ்ரீனிவாஸன் ஓர் ஸபை கூட்டி தானும் தன் திருமார்பை விட்டகலாத ஸ்ரீ தேவியுமாய் நியாயாதிபதிகளாய் வீற்றிருந்தார்களே நீ கவனிக்கவில்லையா? அந்த சபையை அலங்கரித்தவர்கள். ஸர்வஞ்ஞத்வம், ஸர்வசக்தித்வம், ஈச்வரத்வம், ஸமத்வம், ஔதார்யம், கர்ம பல ப்ரதத்வம், வாத்ஸல்யம், காருண்யம், முதலிய கல்யாண குணங்கள்.

(அதாவது, எல்லாவற்றையும் தெரிந்து கொள்ளுகை, எல்லோரையும்காப்பாற்றவும் சிக்ஷிக்கவும் சக்தி உடைத்தாயிருக்கை, எல்லா உலகத்திற்கும் பிரபுவாயிருக்கை, ஸகல ஜனங்களிடத்திலும் ஸமபாவத்துடனிருக்கை, தாராளமாக வழங்குகை, அவரவர்களின் கர்மத்துக்கு தக்க பலத்தை கொடுக்கும் தன்மை.)

அந்த ஸபையில் அபராதியாய் நின்றவர் என் கணவர், அவர் பொருட்டு மனுசெய்து நான் தயா தேவியை என் வக்-

𑌭𑌵𑌤𑍋 𑌭𑌜𑌤𑌾𑌮𑌨𑌨𑍍𑌯𑌸𑌾𑌧𑍍𑌯𑌂
𑌵𑌿𑌨𑌿𑌪𑌾𑌤𑌂 𑌪𑍍𑌰𑌣𑌿𑌪𑌾𑌤𑌵𑍃𑌤𑍍𑌤𑍍𑌯𑌨𑌰𑍍𑌹𑌃 ॥ கஎ

விபதேநஸைதைவ விப்ரதாவன்
விபுதக்ராமவிபன்நிதாநபூத: ।
பவதோபஜதாமநன்யஸாத்யம்
விநிபாதம் ப்ரணிபாதவ்ருத்யநர்ஹ: ॥

(ப - ரை) ஸதைவ - எப்பொழுதும் - விபதெநெவ - கெட்ட வழியாலேயே - விப்ரதாவன் - ஓடிக்கொண்டு - விபுதக்ராமவிபன்னிதாநபூத: - தேவகணங்களுடைய விபத்துக்களுக்குக் காரணமாகியும்: - ப்ரணிபாதவ்ருத்யநர்ஹ: - தாழ்பணிவிக்குத் தகாதவனுமான - இவன் - பவத: - உம்மிடமிருந்து - அனன்யஸாத்யம் - பிறரால் செய்யமுடியாத - விநிபாதம் - நாசத்தை - பஜதாம் - அடையட்டும்.

(தா - யம்) குமார்க்கத்தில் ஸர்வகாலத்திலும் ஓடுகிறவன். தேவர்களுக்கு விரோதி. இவன் முடிவை மற்றொருவர் செய்ய முடியாது. இவன் வணங்கிச்சந்நிதிசெய்ய யோக்கியனல்ல. உம்மிடமிருந்தே தான் முடிவுபெறவேண்டும்.

दमनं दमघोषसंभवस्य प्रबलस्यापि यदर्थ्यते तदेतत् ।
मधुकैटभमेरुमर्दिनस्ते मशकामर्शनमात्रमित्यवैमि ॥

𑌦𑌮𑌨𑌂 𑌦𑌮𑌘𑍋𑌷𑌸𑌂𑌭𑌵𑌸𑍍𑌯
𑌪𑍍𑌰𑌬𑌲𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌯𑌦𑌰𑍍𑌥𑍍𑌯𑌤𑍇 𑌤𑌦𑍇𑌤𑌤𑍍 ।
𑌮𑌧𑍁𑌕𑍈𑌟𑌭𑌮𑍇𑌰𑍁𑌮𑌰𑍍𑌦𑌿𑌨𑌸𑍍𑌤𑍇
𑌮𑌶𑌕𑌾𑌮𑌰𑍍𑌶𑌨𑌮𑌾𑌤𑍍𑌰𑌮𑌿𑌤𑍍𑌯𑌵𑍈𑌮𑌿 ॥ கஅ

தமனம் தமகோஷஸம்பவஸ்ய
ப்ரபலஸ்யாபி யதர்த்யதே ததேதத் ।
மதுகைடபமேருமர்திநஸ்தே
மசகாமர்சனமாத்ரமித்யவைமி ॥



(ப - ரை) ப்ரபலஸ்யாபி - அதிகபலமுடையவனாயினும் - தமகோஷஸம்பவஸ்ய - தமகோஷன்பிள்ளையி (சிசுபால)னுடைய-தமனம் - நாசமானது - அர்த்யத இதியத் - கோரப்படுவது என்றும் - ததேதத் - இது - மதுகைடப மேருமர்திந:. மதுகைடபரென்றும் மேருமலையை நசுக்கிய - தே உமக்கு - மசகாமர்சணமாத்ரம்-கொசுவை நசுக்குவது போல் என்று. அவைமி அறிவேன்.

(தா - யம்) தகப்பனார்தமம் (அடக்கம்) நிரம்பியவர் என்று இருநாமம் பெற்றவர். பிள்ளைதுர்தம கோஷன். எப்பொழுதும் அடங்காமல் கோஷிப்பவன். மதுகைடபர்களையே புராணத்தில் மத்குணங்கள் போன்றவர்கள் என்று வர்ணித்துளது. மத்குணம் மூட்டைப்பூச்சி. இவன் மசகமாத்ரம். மத்குணத்திலும் மிகஸ்வல்பமான கொசு. மூட்டைப்பூச்சிகாதுக்கு வேதனையைகொடுக்காது. இவன் காதுக்குத் துன்பமாய் ரிம் அஷ்டகம் (வசவு) பாடுகிறவன் என்று மசகோபமானத்தின் பொருத்தம் ரஸிகர்மனதைக்கவரும்.

अथवा जगदेतदोदनस्ते तदुपघ्नन्नुपसेचनं च मृत्युः ।
महदादि विलापयन्महिम्ना दमनेनाद्रियसे न दानवानाम् ॥

𑌅𑌥𑌵𑌾 𑌜𑌗𑌦𑍇𑌤𑌦𑍋𑌦𑌨𑌸𑍍𑌤𑍇
𑌤𑌦𑍁𑌪𑌘𑍍𑌨𑌨𑍍𑌨𑍁𑌪𑌸𑍇𑌚𑌨𑌂 𑌚 𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌃 ।
𑌮𑌹𑌦𑌾𑌦𑌿 𑌵𑌿𑌲𑌾𑌪𑌯𑌨𑍍𑌮𑌹𑌿𑌮𑍍𑌨𑌾
𑌦𑌮𑌨𑍇𑌨𑌾𑌦𑍍𑌰𑌿𑌯𑌸𑍇 𑌨 𑌦𑌾𑌨𑌵𑌾𑌨𑌾𑌮𑍍 ॥ கசு

அதவாஜகதேததோதநஸ்தே
ததுபக்னன்னுபஸேசநம் ச ம்ருத்யு: ।
மஹதாதி விலாபயன்மஹிம்நா
தமனேனாத்ரியஸே ந தாநவானாம் ॥

(ப - ரை) அதவா - அல்லது - (வன் இத்தனை பேச்சு) ஏதத் இந்த - ஜகத் - உலகம் - தே உமக்கு - ஓதந: - சாப்பிடும் அன்னம் - தத் - அதை - உபக்னன் - கூடஸம்ஹரிக்கும் ம்ருத்யு: - யமனும் - (உமக்கே) உபஸேசநம் - ஊறுகாய் - மஹிம்நா - ப்ர

பாவத்தாலேயே. மஹதாதி - மஹத்முதலிய தத்துவங்களை - விலாபயந் - லயிக்கும்படி செய்கிற - நீர் - தாநவாநாம் - அஸுரருடைய - தமநேந - வதத்தினால். நாத்ரியஸே - புகழப்படமாட்டீர்.

(தா - யம்) அஸுரர்களை நாசம்செய்வது உமக்கு ஒருபெருமையோ? மஹத்முதலிய ஜகத்வ்யாப்தங்களான ப்ரகிருதிதத்வங்களை நீர்ப்ரளய காலத்தில் உம்முடைய ஸங்கல்பத்தினாலேயே வதிக்கச்செய்கிறீர். உலகம் முழுவதும் அனாயாஸமாய் ம்ருத்யுவல்லவோ ஸம்ஹரிப்பவன் என்றால் அல்ல. அவன் ஊறுகாய். அன்னத்தை சாப்பிட வ்யஞ்சனம் ஸாதனமாகிலும் அதுவும் சாப்பிடப்படுகிறது. எவருக்கு ப்ரம்மக்ஷத்ராதி ஸகல ஜகத்தும் ஓதநமோ. ம்ருத்யு ஊறுகாயோ என்று யமனே உண்மையை வர்ணித்தார். ஸ்வயம் அத்யமானம் ஸத்யதன்னஸாதனம் பவதி ததுபஸேசநம் என்பர். இவ்வர்த்தத்தைச் சொல்லும் ச்ருதி ப்ரளய விஷயம் என்பதை விலாபயந் என்பதால் காட்டுகிறார். ப்ரளயத்தில் உலகம் முழுவதும் பகவானுடைய குக்ஷியில் இருக்கும் என்பர். அன்னம் வயிற்றுக்குள் செல்லும். அன்னம் சாப்பிடுவது போல் அத்தனை அனாயஸமாக ப்ரளயவ்யாபாரம் நடக்கும்.

**सुहृदोऽपि सदा सुरासुराणां प्रणतानुग्रहभावितात्मनस्ते ।**
**क्वचिदापतितोऽपि पक्षपातस्समतामेव समर्थयेत सत्याम् ॥**

𑌸𑍁𑌹𑍃𑌦𑍋𑌽𑌪𑌿 𑌸𑌦𑌾 𑌸𑍁𑌰𑌾𑌸𑍁𑌰𑌾𑌣𑌾𑌂
𑌪𑍍𑌰𑌣𑌤𑌾𑌨𑍁𑌗𑍍𑌰𑌹𑌭𑌾𑌵𑌿𑌤𑌾𑌤𑍍𑌮𑌨𑌸𑍍𑌤𑍇 ।
𑌕𑍍𑌵𑌚𑌿𑌦𑌾𑌪𑌤𑌿𑌤𑍋𑌽𑌪𑌿 𑌪𑌕𑍍𑌷𑌪𑌾𑌤𑌃
𑌸𑌮𑌤𑌾𑌮𑍇𑌵 𑌸𑌮𑌰𑍍𑌥𑌯𑍇𑌤 𑌸𑌤𑍍𑌯𑌾𑌮𑍍 ॥ ௨௰

ஸுஹ்ருதோபி ஸதா ஸுராஸுராணாம்
ப்ரணதாநுக்ரஹபாவிதாத்மநஸ்தே ।
க்வசிதாபதிதோபி பக்ஷபாத:
ஸமதாமேவ ஸமர்த்தயேத ஸத்யாம் ॥

(ப - ரை) ஸதா - எப்பொழுதும் (ஸ்வயமாக) ஸுராஸுராணாம் தேவர்களுக்கும் அஸுரர்களுக்கும் ஸுஹ்ருதோபி -



வேண்டியவராயிருந்தாலும், ப்ரணதாநுக்ரஹ பாவிதாத்மந: - வணங்கியவர்களுக்கு அனுக்ரஹபுத்தியைக் கொள்ளும். தே - உமக்கு - க்வசித் - சிலரிடத்தில் (வணங்கியவரிடத்தில்) ஆபதித: - விழும், பக்ஷபாத: - ப்ரீதியும் - ஸத்யாம் - உண்மையான, ஸமதாமேவ - ஸாம்ய ஸ்வபாவத்தையே, ஸமர்த்தயேத-ஸாதிக்கும்.

(தா - யம்) "ஸமோஹம் ஸர்வபூதேஷு நமேத்வேஷ்யோஸ்திநப்ரிய:" என்றபடி நீர் எல்லாரிடத்திலும் ஸ்வயமாக ஸாம்யத்தை வஹிப்பவரே. எல்லோருக்கும் நல்லதை நினைக்கும் ஹ்ருதயத்தை உடையவரே. ஆகிலும் அவரவர்கள் செய்கைக்கு தகுந்தபடிபயன் அளிக்கவேணும். ஆஸுரப்ரக்ருதிளானவர் தவறுகளைச் செய்வதால் அவர்களைதண்டிக்கிறீர். அனுகூலரிடம் அதிகப்ரீதி பண்ணுகிறீர். இதனால் எல்லாரிடத்திலுமுள்ள பொதுவானப்ரீதிக்கு பங்கமில்லை. அபவாதங்களால் உத்ஸர்க்கங்களுக்கு விரோதமில்லை. தாத்காலிகமாயன்றோ விசேஷநிக்ரஹமும் விசேஷானுக்ரஹமும் ஏற்படுகிறன.

**प्रथमा चरमाच देवतात्वं वरणीया वरदा च विश्ववन्द्या ।**
**निगमेषु सती पुरेषु चैका जनयित्री जनपंक्ति हारिणी च ॥**

𑌪𑍍𑌰𑌥𑌮𑌾 𑌚𑌰𑌮𑌾𑌚 𑌦𑍇𑌵𑌤𑌾𑌤𑍍𑌵𑌂
𑌵𑌰𑌣𑍀𑌯𑌾 𑌵𑌰𑌦𑌾𑌚 𑌵𑌿𑌶𑍍𑌵𑌵𑌨𑍍𑌦𑍍𑌯𑌾 ।
𑌨𑌿𑌗𑌮𑍇𑌷𑍁 𑌸𑌤𑍀 𑌪𑍁𑌰𑍇𑌷𑍁 𑌚𑍈𑌕𑌾
𑌜𑌨𑌯𑌿𑌤𑍍𑌰𑍀 𑌜𑌨𑌪𑌙𑍍𑌕𑍍𑌤𑌿𑌹𑌾𑌰𑌿𑌣𑍀 𑌚 ॥ ௨௧

ப்ரதமா சரமாச தேவதாத்வம்
வரணீயா வரதாச விச்வவந்த்யா ।
நிகமேஷு ஸதீ புரேஷு சைகா
ஜநயித்ரீ ஜநபங்க்தி ஹாரிணீ ச ॥

(ப-ரை) த்வம்-நீர் ப்ரதமா-முதல் தேவதையான விஷ்ணு. சரமாச தேவதா-கடைசி தேவதையான அக்நியுமாகிறீர், வரணீயா-வரிக்கத் தகுந்தவரும், வரதா-வரமளிப்பவரும், விச்வவந்த்யா-உலகத்தில் வணங்கத்தகுந்த விஷ்ணுவும் காயத்ரியுமாகிறீர், நிகமேஷு-வேதங்களிலும், புரேஷு-ச-சரீரங்களிலும், ஏகா-ஓர் அந்தர்யாமி

தேவதையாய் இருக்கிறீர், ஜநயித்ரீ - உலகத்தைப் படைக்கும் ப்ரம்மாவும், ஜநபங்க்தி ஹாரிணீச - ஜனக்கூட்டங்களை ஸம்ஹரிக்கும் ருத்ரனுயுமிருக்கிறீர்,

(தா - யம்) வேதத்தில் சொல்லியபடி விஷ்ணுவென்றும் உத்தமதேவதையும் அந்தர்யாமியானதால் அக்நியென்கிறகடைசி தேவதையும் நீரே. விச்வந்த்யையானகாயத்ரீ தேவதையும் அதில் சொல்லப்படும் தேவதையும் நீரே. வரேண்யம் என்றும் மந்த்ர பதத்தை வரணீயா என்பதால் ஸூசிக்கிறார். வரதா தேவி என்பதை நினைத்து வரதா என்கிறார். நீர் ஒருவரே எல்லா சரீரத்திலும் ஆத்மாவாய் இருக்கிறீர். ஸ்ருஷ்டிக்கும் ப்ரம்மாவும் ஸம்ஹரிக்கும் ருத்ரனும் நீரே. இப்படி இருப்பவராக வேதத்தில் சொல்லப்படுமவர் நீரே. ப்ரளயத்தில் ஒடுமிக்க ஸம்ஹரிப்பதால் பக்தி என்கிறார்.

कलशैरिव कर्मपाशनद्धैः स्थिरकालात्मकचक्रयन्त्रनिघ्नैः ।
विहरस्यधरोत्तरक्रमेषु स्ववशैरेव सुरासुरैस्स्वतन्त्रः ॥

𑌕𑌲𑌶𑍈𑌰𑌿𑌵 𑌕𑌰𑍍𑌮𑌪𑌾𑌶𑌨𑌦𑍍𑌧𑍈𑌃
𑌸𑍍𑌥𑌿𑌰𑌕𑌾𑌲𑌾𑌤𑍍𑌮𑌕𑌚𑌕𑍍𑌰𑌯𑌨𑍍𑌤𑍍𑌰𑌨𑌿𑌘𑍍𑌨𑍈𑌃 ।
𑌵𑌿𑌹𑌰𑌸𑍍𑌯𑌧𑌰𑍋𑌤𑍍𑌤𑌰𑌕𑍍𑌰𑌮𑍇𑌷𑍁
𑌸𑍍𑌵𑌵𑌶𑍈𑌰𑍇𑌵𑌸𑍁𑌰𑌾𑌸𑍁𑌰𑍈𑌸𑍍𑌸𑍍𑌵𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑌃 ॥ ௨௨

கலசைரிவ கர்மபாசநத்தை:
ஸ்திரகாலாத்மகசக்ரயந்த்ரநிக்நை: ।
விஹரஸ்யதரோத்தரக்ரமேஷு
ஸ்வவசைரேவ ஸுராஸுரைஸ்ஸ்வதந்த்ர: ॥

(ப - ரை) ஸ்வதந்த்ர:— இஷ்டப்படி ஜகத்தை ஆளும் நீர், கர்மபாசநத்தை: - பூர்வகர்மங்களென்றும் கயிர்களால் கட்டப் பட்டும், ஸ்திரகாலாத்மகசக்ரயந்த்ரநிக்நை: - ஸ்திரமான காலமாகிறசக்ரயந்த்ரத்தில் அகப்பட்ட, கலசைரிவ - குடங்கள் போன்ற. அதரோத்தரக்ரமேஷு-கீழும்மேலுமாக வரும்போது, ஸ்வசைரேவ - உமக்குள்பட்டவரேயான, ஸுராஸுரை: - தேவர்களைக்கொண்டும் அஸுரர்களைக்கொண்டும், விஹரஸி - விளையாடுகிறீர்,



(தா-யம்) ஸர்வபூதங்களுடைய ஹ்ருதயத்தில் ஈச்வரனை நீர் இருக்கிறீர் என்ருல் "ஈச்வரஸ்ஸர்வபூதாநாம் ஹ்ருத்தேசேர்ஜுநதிஷ்டதி. ப்ராமயந் ஸர்வபூதானி யந்த்ராரூடாநிமாயயா" என்றதில் பிற்பாதியை இங்கு அநுஸரிக்கிருர். "மாயயா" உம் இச்சையினுல் மேலும் கீழுமாக ஆட்டி வைக்கிறீர். குடங்கள் கீழும்மேலும் போய்க் கொண்டு இருக்கும். கிணற்றிலிருந்து ஜலத்தைக் கொண்டுவந்து யந்த்ரகாரரிடம் சேர்க்கும். தேவாஸுரர்கள் மேலும் கீழுமாய்ச் சென்று உமக்கு லீலாரஸத்தைக் கொடுக்கிருர்கள்.

सवने भवमुक्तिसिद्धिरूपे विधिना विश्वपते विचित्रहेतिम् ।
हृदि शान्तधियस्समिन्धतेत्वामनघात्मक्रतु हव्यवाहमाद्यम्॥

𑌸𑌵𑌨𑍇 𑌭𑌵𑌮𑍁𑌕𑍍𑌤𑌿𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌰𑍂𑌪𑍇
𑌵𑌿𑌧𑌿𑌨𑌾 𑌵𑌿𑌶𑍍𑌵𑌪𑌤𑍇 𑌵𑌿𑌚𑌿𑌤𑍍𑌰𑌹𑍇𑌤𑌿𑌮𑍍 ।
𑌹𑍃𑌦𑌿 𑌶𑌾𑌨𑍍𑌤𑌧𑌿𑌯𑌸𑍍𑌸𑌮𑌿𑌨𑍍𑌧𑌤𑍇𑌤𑍍𑌵𑌾𑌮𑍍
𑌅𑌨𑌘𑌾𑌤𑍍𑌮𑌕𑍍𑌰𑌤𑍁 𑌹𑌵𑍍𑌯𑌵𑌾𑌹𑌮𑌾𑌦𑍍𑌯𑌮𑍍 ॥ ௨௩

ஸவநே பவமுக்திஸித்திரூபே
விதிநா விச்வபதே விசித்ரஹேதிம் ।
ஹ்ருதி சாந்ததிய ஸ்ஸமிந்ததேத்வாம்
அநகாத்மக்ரது ஹவ்யவாஹமாத்யம் ॥

(ப - ரை) விச்வபதே - உலகத்திற்கு அதிபதியே, பவமுக்திஸித்திரூபே - ஸம்ஸாரத்திலிருந்து விடுதலை என்னும் முக்தியின் ஸித்தியே வடிவமாயுள்ள, ஸவநே - யாகத்தில், (ஆத்மயாகமென்னும் ப்ரபத்தியில்) விசித்ரஹேதிம் - பலவிதமான திருவாயுதங்களையுடைய, பலநிறமுள்ள ஜ்வாலையுடைய, அநகாத்மக்ரது ஹவ்யவாஹம் - தோஷ லேசமில்லாத ஆத்மயாகத்தில் அக்நியான, ஆத்யம் - மூலகாரணமான, த்வாம் - உம்மை, (அல்லது) முதலான ஆத்மயாகாக்னியை) விதிநா - சாஸ்த்ர விதிப்படி, சாந்ததிய:- அடங்கிய புத்தியுடையவர்கள், ஹ்ருதி - மனஸ்ஸில், ஸமிந்ததே- ஏற்றிவைக்கிருர்கள்.

(தா-யம்) முன்காட்டிய கீதாச்லோகத்திற்கு அடுத்தச்லோகம் (தமேவசரணம் கச்ச ஸர்வ பாவேநபாரத, தத்ப்ரஸாதாத்

பர்ம் சாந்திம் ஸ்தானம் ப்ராப்ஸ்யஸி சாச்வதம்) என்பதை அநு ஸரித்து இங்கே சரணுகதியை வர்ணிக்கிறார். முன்ச்லோகங்களில் வர்ணித்த ஸம்ஸார க்லேசங்களை உடனே போக்கி மோக்ஷஸித்தியைத்தருவதாய் சரணுகதி என்றும் யாகமே மோக்ஷஸித்தி வடிவானது என்கிறார். இதில் ஆத்மா ஹவிஸ். நீர் அதைப்பெற்றுக் கொள்ளும் அக்நி என்கிறார், ஆத்மஹவிஸ்ஸை உமக்கே இது என்று ஸமர்ப்பிக்கவேண்டும். ஹ்ருதயத்தில் இந்த அக்னியை மூட்டி வைக்கிறார்களென்பது பொருந்துமோ வெனில் இந்தஅக்நி சீதளமான அக்நி இந்தப்ரம்மாக்நியில் ப்ரவேசிப்பது குளிர்ந்தமடுவில் இறங்குவதுபோல் ஸுகமளிக்கும், இந்தயாகத்தில் பட்டினி, தூக்கம் விழிப்பு, முதலியதில்லை. இதில் பகவானை திருவாயுதங்கள் முதலியவற்றேடு ஆதிகாரணமான விச்வபதியாக அநுஸந்திக்க வேண்டுமென்று ஸ்ரீ தீக்ஷிதர் காட்டினார். ஸாயதே அஸ்மிந்நிதி ஸவநம் என்பர். இந்த ப்ரபத்தியாகத்தில் ஓர் புதுப் பிறவி பெறுகிறான். ஜன்மதவ்பஸியான ஜன்மத்தைப்பெறுகிறான்.

अणिमादिभिरेक एव भिन्नः परविद्यामणिदर्पणेषु भानात् ।
सुदृशां भजसि त्वमात्मभूतः सुखसन्दर्शनयोग्यमाभिमुख्यम्

𑌅𑌣𑌿𑌮𑌾𑌦𑌿𑌭𑌿𑌰𑍇𑌕 𑌏𑌵 𑌭𑌿𑌨𑍍𑌨𑌃
𑌪𑌰𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌮𑌣𑌿𑌦𑌰𑍍𑌪𑌣𑍇𑌷𑍁 𑌭𑌾𑌨𑌾𑌤𑍍 ।
𑌸𑍁𑌦𑍃𑌶𑌾𑌂 𑌭𑌜𑌸𑌿𑌤𑍍𑌵𑌮𑌾𑌤𑍍𑌮𑌭𑍂𑌤𑌃
𑌸𑍁𑌖𑌸𑌨𑍍𑌦𑌰𑍍𑌶𑌨𑌯𑍋𑌗𑍍𑌯𑌮𑌾𑌭𑌿𑌮𑍁𑌖𑍍𑌯𑌮𑍍 ॥ ௨௪

அணிமாதிபிரேக ஏவ பிந்ந:
பரவித்யாமணிதர்ப்பணேஷு பாநாத் ।
ஸுத்ருசாம் பஜஸி த்வமாத்மபூத:
ஸுகஸந்தர்சனயோக்யமாபிமுக்யம் ॥

(ப - ரை) ஏக ஏவ - ஒருவனே, அணிமாதிபி: - ஸூக்ஷ்ம ரூபம் முதலானதுகளால், பிந்ந: - வேறுவேறு ரூபமுள்ளவனாய், பரவித்யாமணி தர்ப்பணேஷு - பரவித்யை என்னும் (ப்ரஹ்ம வித்யை) மணிக்கண்ணாடிகளில், பாநாத் - ப்ரதிபலிப்பதால், ஸுத்ருசாம் - ஞானிகளுக்கு, (ஸ்த்ரீகளுக்கு) ஆத்மபூத: - உயிராயிருக்கும், த்வம் - நீர் ஸுகஸந்தர்சனயோக்யம் - ஸுகமாய்க் கண்டுகளிக்கத் தகுந்த, ஆபிமுக்யம் - எதிரில் இருப்பதை, பஜஸி - அடைகிறீர்.



கேவலாந்வயி என்பதாக ஹேதுவின்பிறிவு ஒன்று முன்பே காட்டியுள்ளோமன்றே. அதாவது "பக்ஷத்தில் இருப்பது முதலிய ஐந்து ரூபங்களோடு கூடியதாய், தன்னுடைய ஸாத்தியத்திற்கு அபாவத்தை ஓரிடத்திலும் காணமுடியாததுமானது கேவலாந்வயி" என்பதாக" அந்த கேவலாந்வயி ஹேதுவிலும் ப்ரமாணமென்பது யாதெனில்— அந்தஹேதுவைக் கொண்டு ஸாதிக்கப்படும் அர்த்தமானது இல்லையாகில் பாத (பாய) கம் ஏற்படக்கூடியதே ப்ரமாணம். ஹேதுவை இசைந்து ஸாத்யத்தை இசையாவிட்டால் விரோதம் ஒன்றும் காட்டமுடியாத மற்றவை ப்ரமாணங்களல்ல என்பதாக அப்படிப்பட்ட கேவலாந்வயி ஹேதுக்களை முன்பே நிரஸனம் செய்துள்ளோம். ஆகையால் கேவலாந்வயி அநுமானத்தால் அபாவ ரூபமல்லாததொரு அஞ்ஞானமுண்டு என்பதாக மதாந்தரஸ்தர்கள் ஸாதிப்பது முடியாது. இவ்வழியிலும் ப்ராமாணிகருக்கு வாதிகளை வெல்லும் ச்ரமம் குறைந்தது.

அந்வயவ்யதிரேகி என்பதாக மற்றொரு ஹேதுவின் பிறிவாகும். ஹேதுஉள்ள இடம் எங்கும் ஸாத்யமிருப்பதாகிய அந்வயவ்யாப்தியும் ஸாத்யமானது இல்லாத இடங்களில் ஹேதுவும் இல்லாமையாகிற வ்யதிரேகவ்யாப்தியும் உள்ள ஹேதுவை அந்வயவ்யதிரேகி என்கிறது. இந்தஹேதுவைக் கொண்டு ஒருக்காலும் இந்த்ரியங்களுக்கும் புலப்படமுடியாத ஈச்வரன் முதலியவற்றை அநுமானம் செய்கிறார்கள் நையாயிகர் முதலியவர்கள். பூமி முதலியவை, உண்டாகின்றனவாகையால் இவற்றிற்குக் கர்த்தா ஒருவன் வேண்டும். அவனே ஈச்வரன் என்பதாக அவர் கொள்ளும் அநுமானமாகும். எது உண்டாகின்றதோ அது கர்த்தாவோடு கூடியது என்பதாக ப்ரத்யக்ஷத்தால் அறியக்கூடிய நியதஸம்பந்தத்தை குடம் முதலியவற்றில் நாம்கண்டிருப்பதை உதாஹரணமாகக் கொண்டு இவ்வநுமானம் செய்கிறார்கள். இப்படியாகில் அந்த கர்த்தாவானவன் சரீரமுடையவனாகவும் கர்மவச்யனாகவும் கண்டிருப்பதால் ஈச்வரனும் அப்படிப்பட்டவனாக வேண்டும். ஈச்வரன் அப்படியல்லனே. ஆகவே அவர்சொல்லும் அநுமானத்தில் உபாதி ஸத்ப்ரதிபக்ஷம் முதலிய தூஷணம் ஏற்படுவதால் அந்த ஹேதுவைக் கொண்டு அதீந்த்ரியமாகவே இருக்கும

தொன்றை அநுமானம் செய்ய முடியாது. இவ்வழியிலும் வாதிகளை ஜயிக்க வைதிகருக்கு ச்ரமம் குறைந்தது.

(பூ) சந்திரபிம்பத்தின் பின்பாகத்தை நாம் ஒருபொழுதும் கண்டதில்லையே. அதை நாம் அநுமானம் செய்கிறோமன்றோ. இது அத்யந்தம் அதீந்த்ரிய மானதொன்றைப் பற்றிய அநுமான மாச்சுதே, இது எப்படிக் கூடும்? எனில்.

(ஸி) அந்த அநுமானம் கூடும். ஏனெனில் சந்திரபிம்பத்தின் பின்பாகத்தில் நமது இந்திரியம் ஸம்பந்தப் படவில்லை. ஆகவே அது நமக்குத் தெரியவில்லை. பர்வதத்தின் பின்பாகமானது முன் பக்கத்திலிருந்து நாம் பார்க்கும் பொழுது இந்திரிய ஸம்பந்த மில்லாமையால் தெரிவதில்லை, அதனாலேயே அது அதீந்திரிய மாய்விடுமா? பின்பக்கத்தில் சென்றால் அதைப்பார்க்கலாமன்றோ. அப்படியே சந்திரபிம்பத்தின் பின்பாகத்தையும் அதற்கு மேலிலிருந்து காணலாம். ஆகையால் அது இந்திரியங்களுக்குப் புலப்படவே கூடாததொன்றன்று. ஆகையால் அதை அநுமானம் செய்வது உசிதமே.

ஒரு வஸ்துவானது இருக்கச் செய்தேயும் அதைநாம் காண முடியாததற்குப் பலஹேதுக்கள் இருக்கின்றனவே. இதைப் பற்றி ஸாங்கிய மதஸ்தரும் சொல்லியிருக்கிறார்கள்.

அதாவது— (ச்லோ) (1) மேருபர்வதம் முதலியவை வெகு தூரத்திலிருப்பதால் நமக்குத் தெரிவதில்லை. (2) நம் கண்களின் இமைகளை வெகுஸமீபத்திலே இருப்பதால் பார்க்கமுடியவில்லை. (3) கண்முதலிய இந்திரியம் அழிந்துவிடுவதனால் எதிரிலுள்ள வஸ்துவை பார்ப்பது முதலிய ஏற்படுகிறதில்லை. (4) மனது நிலை கொள்ளாமல் வேறு விஷயத்தில் வ்யாஸங்கம் ஏற்படுவதினால் முன்னிலே உள்ளபதார்த்தத்தையும் காண்பதில்லை. (5) ஸூக்ஷ்மமாகையால் ஜலத்திலுள்ள அக்னியைக் காண்பதில்லை. (6) சுவர் முதலிய மறைவினால் வெளியிலே உள்ள பதார்த்தத்தைப் பார்ப்பதில்லை. (7) பித்தத்தினால் கண்மறைவு ஏற்படுவதினால் சங்கின் உள்ள வெண்மையை அறிய முடியவில்லை. (8) ஸமானமான வஸ்துவோடு சேர்க்கையினால் ஜலத்திலுள்ள பால் முதலிய



வைக் காணமுடியவில்லை. என்பதாக ஸாங்கியர் சொல்லியுள்ளார்கள். ஆனால் அந்தஸாங்கியர்கள் மூலப்ரக்ருதி என்கிற தத்வத்தை அநுமானம் செய்கிறார்கள் அதாவது — (ச்லோ) அந்த மூலப்ரக்ருதிக்கு மஹான் அஹங்காரம் முதலியவை ஸூக்ஷ்மங்களாகையால் ஸத்ருசகார்யங்கள். நமக்குக் காணப்படும் ப்ருதிவீ முதலியவை ஸ்தூலங்களாகையால் ஸத்ருசமல்லாத கார்யங்கள். அவற்றில் ஸ்தூல கார்யங்களில் ஸத்வம் முதலிய குணம் இருப்பதினால் இதற்குக் காரணமும் ஸத்வம் முதலிய குணமுடையது. அதுதான் ப்ருக்ருதி. என்பதாக ஸ்தூல கார்யங்களைக்கொண்டு ப்ருக்ருதியை அனுமானம் செய்யவேண்டும். அந்தப்ரக்ருதியானது ஸூக்ஷ்மமாகையால் நமக்குப் ப்ரத்யக்ஷமானதில்லை. அன்றி அவ்வஸ்துவே இல்லாமையாலன்று என்பதாக அவர்கள் ப்ருக்ருதியை அனுமிக்கிறார்கள் நாமோ இம்மாதிரியான விஷயத்தில் அநுமானமே கூடாதென்கிறோம். ஏனெனில் ப்ரக்ருதியானது அத்யந்தம் அதீந்திரியம். இதை அனுமானம் செய்வதானால் ஹேதுவிற்கு வ்யாப்தியை (ஸாத்யத்தோடு நியதஸம்பந்தத்தை) நிச்சயிப்பது முடியாது. அவ்வாறன்றிக்கே இந்திரியத்தினால் அறியக்கூடியதாக இருக்கச் செய்தே ஸூக்ஷ்மமாகையால் காணமுடியாத வற்றைப்பற்றி அநுமானம் செய்வதை நாம் ஆக்ஷேபிக்கவில்லை. உஷ்ணஜலத்தில் அக்னியானது இருக்கின்றது. இதுநமக்குத் தென்படவில்லை. ஆகிலும் உஷ்ண ஸ்பர்சத்தினால் அக்னியை அநுமானம் செய்கிறோம். இவ்வநுமானத்தில் விரோதம் ஒன்று மில்லை. சாஸ்திரத்தைக் கொண்டே ஹேதுவிற்கும் ஸாத்யத்திற்கும் வ்யாப்தி (நியதஸம்பந்தம்) ஏற்படுமிடத்தில் அந்தஹேதுவைக்கொண்டு மிகவும் அதீந்திரியமான தொன்றை அநுமானம் செய்வதை நாம் தடுக்கவில்லை அதாவது — ப்ராஹ்மண்யம் முதலியஜாதியையும், தேஜஸ் முதலிய குணத்தையும், சஸ்த்ரஜீவனம் முதலியகர்மாவையும், நிறத்தையும், செய்யவேண்டியதை நிச்சயிப்பதாகிய ப்ரஜ்ஞையையும், தாரணமுள்ளபுத்தியையும், வ்யாதி முதலிய வற்றையும் கண்டு அவற்றிற்கு மூலமான புண்ய பாபவிசேஷங்களை அநுமானம் செய்வது. சாஸ்திரத்தைக் கொண்டே இங்குஸாத்ய ஹேதுக்களுக்கு உள்ள நியதஸம்பந்தத்தை நிச்சயிக்க வேண்டும். இந்த அநுமானம் நமக்கு ஸம்மதமே.

(பூ) ஆனல் "இந்திரியங்களுக்கு புலப்படாதவை எல்லாவற்றையும் சாஸ்திரம் கொண்டே அறிய வேண்டுமல்லது அவற்றிற்கு அநுமானம் கூடாது" என்பதாக ஸ்ரீபாஷ்யத்திலே அருளிச் செய்திருக்கிறரே. இது எப்படி உபபன்னம்? எனில்— (ஸி) ப்ரத்யக்ஷத்திஞல் ஹேது ஸாத்யங்களுக்கு உள்ள நியதஸம்பந்தத்தைக் கொண்டு அத்யந்தம் இந்திரிய கோசரமல்லாத தொன்றை ஸாதிப்பதோ பாதிப்பதோ முடியாது என்பதாக அந்த பாஷ்யத்தின் தாத்பர்யம். சாஸ்திரத்திஞல் ஏற்பட்டுள்ள நியதஸம்பந்தத்தை மூலாதாரமாகக் கொண்டு அதீந்திரிய வஸ்துவை அநுமானம் செய்வதை நிஷேதிப்பதில் அந்தபாஷ்யத்திற்கு நோக்கமன்று. அந்த அநுமானத்திற்கும் சாஸ்திரமே மூலமாகையால் சாஸ்திரமாகிய ப்ரமாணத்திலேயே அது முடிவு பெறுகின்றமையால் சாஸ்திரமே ப்ரமாணம் என்கிற பாஷ்யத்திற்கு விரோதமில்லை.

"ஸாமாந்யதோத்ருஷ்டம் முதலியதை நிரூபித்தல்"

இப்படி சாஸ்திரத்திஞல் வ்யாப்தி நிச்சயம் ஏற்படுமிடத்தில் அதீந்திரிய வஸ்துவை அநுமானம் செய்யலாம் என்றதனலே ஸாமான்யதோத்ருஷ்டம் என்றும் விசேஷதோத்ருஷ்டம் என்றும் அநுமானத்தை நையாயிகன் விபாகம் செய்வதற்கும் விஷயவ்யவஸ்தை செய்யப் பட்டதாகிறது. எப்படிஎனில் நம்போன்றவர்களின் ப்ரத்யக்ஷத்தால் அறியகூடிய தொன்றைப் பற்றிய அநுமானத்தை விசேஷதோத்ருஷ்டம் என்பது. நம்போன்றவர்களின் ப்ரத்யக்ஷத்தால் அறிய முடியாததொன்றைப் பற்றிய அநுமானத்தை ஸாமான்ய தோத்ருஷ்டம் என்பது என்பதாக நையாயிகர் சொல்லுகிறர்கள். அதன் தாத்பர்யமாவது— சாஸ்திரத்தைக் கொண்டே வ்யாப்தியைத் தெளிந்து அதனல் ஏற்படும் அநுமானமானது "ஸாமான்ய தோத்ருஷ்டம்." நமது ப்ரத்யக்ஷம் முதலியவற்றினலே வ்யாப்தியைத் தெளிந்து ஏற்படுமது விசேஷ தோத்ருஷ்டம் என்பதாக அந்த விபாகத்திற்குநோக்கம் ஸித்தித்ததாகிறது. மேலும் அத்யந்தம் அதீந்திரியமன்றிக்கே இருக்கச் செய்தேயும் ஸூக்ஷ்மமாகையால் உஷ்ண ஜலத்திலுள்ள அக்னி நமக்கு கண்ணிற்குப் புலப்படுவதில்லை, அதைப்போன்ற அநுமானம் ஸாமான்யதோத்ருஷ்டம், ஸ்தூலவஹ்னி முதலியதைப்பர்வதம் முதலியவற்றில் அநுமானம்



செய்வது விசேஷதோத்ருஷ்டம் என்பதாக லோகப்ரஸித்தமானவற்றிலே ஸூக்ஷ்மம் சிலது, ஸூக்ஷ்மமல்லாதது சிலது என்கிற வ்யத்யாஸம் இருப்பதால் அவற்றைப் பற்றிய அநுமானத்திலும் முன் கூறியபடி வ்யத்யாஸம் ஸித்திக்கின்றது.

சிலர் சொல்லுவதாவது— எந்த ஹேதுவிற்கு எந்த ஸாத்யத்தோடு நியதஸம்பந்தத்தை நாம் கண்டிருக்கிறேமோ அந்த ஹேதுவிஞல் அந்த ஸாத்யமாகிற வ்யக்தியை வேறு தேசத்திலோ வேறொரு காலத்திலோ அநுமானம் செய்வது விசேஷதோத்ருஷ்டம் என்பது, அப்படி அன்றிக்கே நியதஸம்பந்தத்தை நாம் அறிந்துள்ள வ்யக்திக்கு ஸஜாதீயமானதொன்றைக் கொண்டு எதோடு நியதஸம்பந்தம் ஏற்பட்டதோ அதற்கு ஸஜாதீயமான மற்றென்றை அநுமானம் செய்வது ஸாமான்ய தோத்ருஷ்டம் என்பதாக அவர் சொல்வது- உதா- தூமத்திஞல் அக்னியை அநுமானம் செய்வது ஸாமான்யதோத்ருஷ்டம். க்ருத்திகா நக்ஷத்திரத்திஞல் ரோஹிணி நக்ஷத்ரத்தை அநுமானம் செய்வது விசேஷதோத்ருஷ்டம். என்று அவர்கள் கொள்கை. அவர் சொல்லும் விசேஷதோத்ருஷ்டத்தின் உதாஹரணத்தை நிரூபித்துப்பார்த்தால் ஸாமாந்யதோத்ருஷ்டத்திலேயே அதுமுடிவுபெறுகின்றது. எப்படிஎனில்-க்ருத்திகா நக்ஷத்திரத்திஞல் ரோஹிணீ நக்ஷத்ரத்தை நாம் அநுமானம் செய்வதில்லை. பின்னேயோவெனில்- க்ருத்திகை உதயமாவதைக் கொண்டு ரோஹிணீ நக்ஷத்திரம் ஸமீபத்தில் உதயமாகப் போவதை அநுமானம் செய்கிறேம். தேச விசேஷத்திஞல் ஸம்பந்தத்தையே உதயம் என்கிறது. இந்த ஸம்பந்தமானது ஒன்றல்ல பல உண்டு. ஆகவே வ்யாப்தி (நியதஸம்பந்தம்) யானது எந்த உதய வ்யக்திகளுக்கு அதாவது தேச விசேஷ ஸம்பந்தங்களுக்கு அறியப் பட்டிருக்கின்றதோ அந்த ஜாதியைச் சேர்ந்ததொன்றை ஹேதுவாகச் செய்து எதோடு நியதஸம் பந்தம் முன் அறியப்பட்டுள்ளதோ அந்த ஜாதியைச் சேர்ந்த மற்றென்றையே அநுமானம் செய்கிறேம். ஆகவே வ்யாப்தியானது ஸாத்ய ஹேதுக்களுக்கு விசேஷித்து ஏற்படவில்லை. பொதுவாகவே ஏற்பட்டிருக்கிறது.

அப்படிக்கொள்ளாமல் வ்யாப்தியானது (நியதஸம்பந்தமானது) எந்த இரண்டு வ்யக்திகளுக்கு க்ருஹீதமாச்சுதோ அந்த வ்யக்திகள் இரண்டிலொன்றில் மற்றென்றைப் பற்றிய

ஞானம் ஏற்படுவதாகக் கொண்டால் இந்தஞ் ஞானமானது, பூர்வம் அநுபவத்தினுல் ஏற்பட்டுள்ள ஸ்மரணமேயாகும், அநுமானமாகாது.

(பூ) ஆகிலும் புத்ரனுடைய குறலைக்கேட்டு புத்ரனை அநுமானம் செய்கிறோமே அது விசேஷதோத்ருஷ்டம் ஆகலாமே எனில். (ஸி) இங்கும் இப்பொழுது கேட்கப்படும் குறலைக் கொண்டு இது புத்ரனுடைய குறல் என்பதாக அநுமானமே ஏற்படுகிறது. இப்படி அனுமானம் செய்யப்பட்ட குறலைக் கொண்டு புத்ரனுடைய ஸன்னிதானத்தைப் பற்றிய அனுமானம் பிறகு ஏற்படுகிறதேயன்றி புத்ரனைப்பற்றிய அநுமானமில்லை. ஆகவே (வ்யாப்தி) நியதஸம்பந்தம் எவற்றிற்கு க்ருஹீதமோ அதோடு இந்த ஹேது ஸாத்யங்களுக்கு வேற்றுமையே ஏற்படுகிறது.

(பூ) ஆகிலும் தூரத்திலுள்ள ஒருவன், முன் கண்டுள்ள பர்வதசிகரத்தைப் பார்த்து அதே பர்வதத்தை அநுமானம் செய்கிருன். முன் வ்யாப்தியை அறியும்போது க்ருஹீதங்களான இரண்டு வ்யக்திகளில் ஒன்றைக் கொண்டே மற்றொன்றுக்கு அநுமானமிது, ஆகவே இது விசேஷதோத்ருஷ்டம் என்னலாமே எனில்.

(ஸி) இது ஸரியன்று, இந்தஞ் ஞானமானது முன்பு பார்த்துள்ள பர்வத்ததைப்பற்றிய ஸ்மரணமே என்பதாக எப்படியும் நிர்வாஹம் செய்யவேண்டும்.

அநுமானம் ஏற்படும் காலத்திலே பர்வதமானது இருப்பதாகவோ, அல்லது பர்வதமானது ருஜுவானது என்பதாகவோ இம்மாதிரியாக பர்வதத்தைக் காட்டிலும் மற்றொன்றை அநுமானம் செய்வதாகக் கொண்டால் இந்த ஸாத்யவ்யக்திக்கு பூர்வம் ப்ரத்யக்ஷம் முதலிய அநுபவம் ஏற்படாமையாலே அவ்வநுபவம் ஏற்பட்டுள்ள காலவ்யக்தி முதலியதைக் காட்டில் சில பொழுது ஸாதிக்கப்படுமதாகிய காலவ்யக்தி முதலியது வேறுப்பட்டது என்பது ஸித்திக்கின்றது. ஆகவே இதுவும் ஸாமான்ய தோத்ருஷ்டமாகும் என்பதாக,

ஸ்ரீ ந்யாயபரிசுத்தி அநுமானுத்யாயத்தில் வ்யாப்தி முதலியதைப்பற்றிய முதல் ஆஹ்னிகத்திற்கு விவரணம் ஸமாப்தம்.

—:(O):—

600 008